(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 31 ]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2008, ஒற்றோபர் 22, புதன்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0089/ ' 08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அரசாங்கத்திடமிருந்து முறையான பணிப்புரைகள் இன்மையால் அரசாங்க நிறுவனங்களினால் பணமாக மாற்றப்படாமல் காணப்படும் வெளிநாட்டு நாணயங்களின் தொகை எவ்வளவு என்பதை அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மக்கள் வங்கி, இலங்கை வங்கி ஆகியன தொடர்பில் மேற்படி தகவல்களை உள்ளடக்கிய முழுமையான பட்டியலொன்றை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) இப்பிழையை திருத்துவதற்கு மேற்கொள்ளப்படவிருக்கின்ற நடவடிக்கை என்ன என்பதையும்,

(ii) எதிர்பாரா இப்பொறுப்பை தேசிய கணக்குகளில் பதியாமைக்கான காரணம் என்ன என்பதையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0090/ ' 08

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுதந்திரத்தின் பின்பு முதல் தடவையாக இலங்கை அரசாங்கம் வெளிநாடுகளிடமிருந்தும் வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்தும் கடனைப் பெற்றுக்கொண்ட திகதி என்னவென்பதையும்,

(ii) குறிப்பிட்ட வருடங்களுடன் பிரதம அமைச்சர், சனாதிபதி ஆகியோரின் பெயர்கள் என்ன என்பதையும்,

(iii) முதலாவது ஐக்கிய அமெரிக்க டொலர் திறைசேரி முறி வழங்கப்பட்ட திகதி என்னவென்பதையும்,

(iv) அப்போதைய சனாதிபதி, பிரதம அமைச்சர், நிதி அமைச்சர் ஆகியோரின் பெயர்கள் என்னவென்பதையும்,

(v) ஐக்கிய அமெரிக்க டொலராக வர்த்தகக் கடன்கள் அரசாங்கத்தினால் முதற்தடவையாக பயன்படுத்தப்பட்ட திகதி என்னவென்பதையும்,

(vi) அப்போதைய சனாதிபதி, பிரதம அமைச்சர், நிதி அமைச்சர் ஆகியோரின் பெயர்கள் என்னவென்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இன்றைய திகதியிலுள்ளவாறு மொத்த கடன்கள், உள்நாட்டு, வெளிநாட்டுக் கடன்கள் ஆகியன எவ்வளவு என்பதை தனித்தனியாகவும்,

(ii) இன்றைய திகதியிலுள்ளவாறு தனிநபருக்கான கடன் எவ்வளவு என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0091/ '08

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1994 ஆம் ஆண்டிலிருந்து வருட அடிப்படையில்,

(i) நாட்டிற்கான ஓர் ஒதுக்கமாக மத்திய வங்கியில் வைக்கப்பட்டுள்ள தங்கத்தின் மொத்த அளவையும்,

(ii) அபராதங்கள் பறிமுதல் என்பவற்றிலிருந்தும் ஆட்கள் அல்லது அமைப்புக்கள் மீது விதிக்கப்படும் தண்டத் தொகைகளிலிருந்தும் பெறப்பட்டு மத்திய வங்கியில் வைக்கப்பட்டுள்ள தங்கத்தின் அளவையும்,

(iii) விற்கப்பட்ட தங்கத்தின் அளவை அவற்றின் பெறுமதியுடனும்,

(iv) தங்கத்தை விற்பதற்காக மத்திய வங்கியினால் கடைப்பிடிக்கப்பட்ட காரணத்தையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தங்கத்தை விற்பதற்காகப் போட்டியடிப்படையில் விலைகள் கோரப் பட்டனவா என்பதையும்,

(ii) அப்படியாயின், 2006 ஆம் ஆண்டு சனவரியிலிருந்தான நடவடிக்கைகளையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0207/ ' 08

4.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பெருந்தோட்டக் கைத்தொழில் (அமைச்சரவை) அமைச்சருக்கு உத்தியோக பூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது அரசாங்க உடைமையா என்பதையும்,

(iii) அரசாங்க உடைமை இல்லையெனில், எந்த அடிப்படையில் அவ்விடுதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருப்பின், அது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திருத்தப்பட்டிருப்பின் மேற்படி ஒவ்வொரு ஆண்டுகளில் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி விடுதியின் பாவனைக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செலவில் தளபாடங்கள் அல்லது வேறு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0208/ ' 08

5.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— சிறுவர் அபிவிருத்தி, பெண்கள் வலுவூட்டுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிறுவர் அபிவிருத்தி, பெண்கள் வலுவூட்டுகை (அமைச்சரவை) அமைச்சருக்கு உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது அரசாங்க உடைமையா என்பதையும்,

(iii) அரசாங்க உடைமை இல்லையெனில், எந்த அடிப்படையில் அவ்விடுதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருப்பின், அது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திருத்தப்பட்டிருப்பின் மேற்படி ஒவ்வொரு ஆண்டுகளில் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி விடுதியின் பாவனைக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செலவில் தளபாடங்கள் அல்லது வேறு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0209/ ' 08

6.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உள்ளூராட்சி, மாகாண சபைகள் (அமைச்சரவை) அமைச்சருக்கு உத்தியோக பூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது அரசாங்க உடைமையா என்பதையும்,

(iii) அரசாங்க உடைமை இல்லையெனில், எந்த அடிப்படையில் அவ்விடுதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருப்பின், அது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திருத்தப்பட்டிருப்பின் மேற்படி ஒவ்வொரு ஆண்டுகளில் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி விடுதியின் பாவனைக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செலவில் தளபாடங்கள் அல்லது வேறு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0380/ ' 08

7.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மேதகு சனாதிபதி அவர்கள் 2007 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தை சமர்ப்பித்த போது குறைந்த வருமானம் பெறுபவர்கள் பெற்றுக்கொண்டுள்ள வீடமைப்பு கடன்களை பதிவழிப்பு செய்வதற்கு பிரேரணையொன்றை சமர்ப்பித்தாரென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி வீடமைப்பு கடன்களுக்கான பதிவழிப்பு எந்தத்திகதி முதல் எக்கால கட்டத்திற்கு ஏற்புடையதாகுமென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) புத்தல, கம்உதாவ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட வீடுகளில் வதியும் குறைந்த வருமானம் பெறுபவர்களிடமிருந்து இற்றைவரை மாதாந்தம், கடன் தொகை அறவிடப்படுகின்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இவர்களின் வீடமைப்பு கடன்களை பதிவழிப்பதற்கு அவர் நடவடிக்கை யெடுப்பாரா என்பதை இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0414/ ' 08

8.

கௌரவ பியசிறி விஜேநாயக்க,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச ஊழியர் ஒருவர் மாகாண சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்படும் போது அவர் அரச சேவையில் ஈடுபடுகின்ற அதேநேரம் மாகாண சபை உறுப்பினர் பதவியையும் ஏற்க முடியுமா,

(ii) இவர் 1189(1) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் சம்பளமற்ற லீவு பெறுதல் அல்லது ஓய்வு பெறுதல் வேண்டுமா,

(iii) இன்றேல், அவர் தொடர்ந்தும் அரச நிறுவனத்தில் சேவையாற்றுதல் மற்றும் மாகாண சபை உறுப்பினர் பதவி ஆகிய இரண்டையும் ஒரேநேரத்தில் வகிக்க முடியுமா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இலங்கை வங்கியின் ஓர் ஊழியரான திரு. ஏ. ஏ. எச். பர்னாந்து இலங்கை வங்கியில் சேவையாற்றிக் கொண்டிருக்கும்போதே மத்திய மாகாண சபை உறுப்பினர் ஒருவராகவும் சேவையாற்றியுள்ளார் என்பதை அவர் அறிவாரா?

(இ) ஆமெனில், இவர் அரச பணத்தை மோசடி செய்துள்ளார் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) (i) இவர் மேற்படி இரண்டு சம்பளங்களையும் எந்த ஆண்டுகளில் பெற்றுள்ளார்,

(ii) அவ்வாறெனில், இவருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது

என்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0481/ ' 08

9.

கௌரவ விஜித ரணவீர,— மின்வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2007 ஆம் ஆண்டில் அம்பாந்தோட்டை மாவட்ட "ரன்னெலிவெட்ட" மின்சார கருத்திட்டத்தின் கீழ் வீரகெட்டிய பிரதேச செயலகப் பிரிவில் ஒவ்வொரு மின்வலு அபிவிருத்திப் பணிக்காகவும் செலவிடப்பட்டுள்ள பணம் எவ்வளவு,

(ii) அக்கருத்திட்டத்தின் கீழ் 2008 ஆம் ஆண்டுக்காக மதிப்பிடப்பட்டுள்ள பணமும் ஒவ்வொரு திட்டத்திற்காகவும் செலவிடப்படுகின்ற பணமும் எவ்வளவு

என்பதை வெவ்வேறாக அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 2006 ஆம் ஆண்டு முடிவடைந்த போது வழங்கப்பட்டிருந்த மொத்த மின்சார இணைப்புகளின் எண்ணிக்கையும் 2007 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட எண்ணிக்கையும் எவ்வளவு,

(ii) 2007 ஆம் ஆண்டில் பாராளுமன்றம், மாகாணசபைகள், அமைச்சுக்கள், அரச நிறுவனங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்கள் என்பவற்றின் மூலம் சம்பந்தப்பட்ட தொகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்காக வழங்கப்பட்டுள்ள பணம் வெவ்வேறாக எவ்வளவு,

(iii) மேற்படி பணத்தில் வழங்கப்பட்டுள்ள மின்சார இணைப்புக்களின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) சம்பந்தப்பட்ட பிரதேச செயலகப் பிரிவில் இலங்கை மின்சார சபையினால் வசதிகள் வழங்கப்படாமை காரணமாக மின்சாரம் பெறாத வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) மேற்படி பிரிவுக்கான "ரன்னெலிவெட்ட" மின்சார கருத்திட்டத்தில் 2007 ஆம் ஆண்டிற்கான திட்டங்களும் இலக்குகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா,

(iii) ஆமெனில், அவை யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0482/ ' 08

10.

கௌரவ விஜித ரணவீர,— மின்வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2007 ஆம் ஆண்டில் அம்பாந்தோட்டை மாவட்ட ரன்னெலிவெட்ட" மின்சார கருத்திட்டத்தின் கீழ் கட்டுவன பிரதேச செயலகப் பிரிவில் ஒவ்வொரு மின்வலு அபிவிருத்திப் பணிக்காகவும் செலவிடப்பட்டுள்ள பணம் எவ்வளவு,

(ii) அக்கருத்திட்டத்தின் கீழ் 2008 ஆம் ஆண்டுக்காக மதிப்பிடப்பட்டுள்ள பணமும் ஒவ்வொரு திட்டத்திற்காகவும் செலவிடப்படுகின்ற பணமும் எவ்வளவு

என்பதை வெவ்வேறாக அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 2006 ஆம் ஆண்டு முடிவடைந்த போது வழங்கப்பட்டிருந்த மொத்த மின்சார இணைப்புகளின் எண்ணிக்கையும் 2007 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட எண்ணிக்கையும் எவ்வளவு,

(ii) 2007 ஆம் ஆண்டில் பாராளுமன்றம், மாகாணசபைகள், அமைச்சுக்கள், அரச நிறுவனங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்கள் என்பவற்றின் மூலம் சம்பந்தப்பட்ட தொகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்காக வழங்கப்பட்டுள்ள பணம் வெவ்வேறாக எவ்வளவு,

(iii) மேற்படி பணத்தில் வழங்கப்பட்டுள்ள மின்சார இணைப்புக்களின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) சம்பந்தப்பட்ட பிரதேச செயலகப் பிரிவில் இலங்கை மின்சார சபையினால் வசதிகள் வழங்கப்படாமை காரணமாக மின்சாரம் பெறாத வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) மேற்படி பிரிவுக்கான “ரன்னெலிவெட்ட” மின்சார கருத்திட்டத்தில் 2007 ஆம் ஆண்டிற்கான திட்டங்களும் இலக்குகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா,

(iii) ஆமெனில், அவை யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0483/ ' 08

11.

கௌரவ விஜித ரணவீர,— மின்வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2007 ஆம் ஆண்டில் அம்பாந்தோட்டை மாவட்ட “ரன்னெலிவெட்ட” மின்சார கருத்திட்டத்தின் கீழ் ஓக்கேவெல பிரதேச செயலகப் பிரிவில் ஒவ்வொரு மின்வலு அபிவிருத்திப் பணிக்காகவும் செலவிடப்பட்டுள்ள பணம் எவ்வளவு,

(ii) அக்கருத்திட்டத்தின் கீழ் 2008 ஆம் ஆண்டுக்காக மதிப்பிடப்பட்டுள்ள பணமும் ஒவ்வொரு திட்டத்திற்காகவும் செலவிடப்படுகின்ற பணமும் எவ்வளவு

என்பதை வெவ்வேறாக அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 2006 ஆம் ஆண்டு முடிவடைந்த போது வழங்கப்பட்டிருந்த மொத்த மின்சார இணைப்புகளின் எண்ணிக்கையும் 2007 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட எண்ணிக்கையும் எவ்வளவு,

(ii) 2007 ஆம் ஆண்டில் பாராளுமன்றம், மாகாணசபைகள், அமைச்சுக்கள், அரச நிறுவனங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்கள் என்பவற்றின் மூலம் சம்பந்தப்பட்ட தொகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்காக வழங்கப்பட்டுள்ள பணம் வெவ்வேறாக எவ்வளவு,

(iii) மேற்படி பணத்தில் வழங்கப்பட்டுள்ள மின்சார இணைப்புக்களின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) சம்பந்தப்பட்ட பிரதேச செயலகப் பிரிவில் இலங்கை மின்சார சபையினால் வசதிகள் வழங்கப்படாமை காரணமாக மின்சாரம் பெறாத வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) மேற்படி பிரிவுக்கான “ரன்னெலிவெட்ட” மின்சார கருத்திட்டத்தில் 2007 ஆம் ஆண்டிற்கான திட்டங்களும் இலக்குகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா,

(iii) ஆமெனில், அவை யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0501/ ' 08

12.

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஐக்கிய நாடுகளின் அமைதிகாக்கும் படையில் சேவைக்காக இலங்கைத் தேசத்திலிருந்து ஹயிட்டி இராச்சியத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட படை வீரர்கள் மற்றும் ஏனைய அதிகாரிகளின் எண்ணிக்கை யாது,

(ii) இவர்கள் ஹயிட்டி இராச்சியத்தின் அமைதிகாக்கும் படையின் கடமைகளுக்காக தீவில் இருந்து அனுப்பி வைக்கப்பட்ட திகதி யாது,

(iii) ஹயிட்டி அமைதிகாக்கும் படையில் இவர்கள் சேவையாற்றிய காலப்பகுதி யாது,

(iv) இவர்கள் மீண்டும் இத்தீவுக்கு எப்போது அனுப்பி வைக்கப்பட்டார்கள்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மீண்டும் இத்தீவுக்கு அனுப்பிவைக்கப்பட்ட படைவீரர்களுக்கு 6 மாதகால ஐக்கிய நாடுகளின் அமைதிகாக்கும் படையின் சேவைக்குரிய சம்பளம் இற்றைவரை செலுத்தப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(இ) இவர்களுக்கு உரித்தான நிலுவைச் சம்பளம் எப்போது செலுத்தப்படுமென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0502/ ' 08

13.

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2004 ஆம் ஆண்டில் பயிற்சி பெற்று தொழில் அமைச்சு மற்றும் வெளிநாட்டுத் தொழில் வழங்கும் தனியார் கம்பனி மூலமாக இத்தாலியில் தாதி உதவியாளர் பதவிகளுக்காக அனுப்பிவைக்கத் தெரிவு செய்யப்பட்ட இலங்கையரது எண்ணிக்கை யாது,

(ii) தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர், முகவரி மற்றும் கல்வித்தகைமைகள் வெவ்வேறாக யாவை,

(iii) இவ்விதமாகத் தெரிவு செய்யப்பட்டவர்களில் இதுவரை மேற்படி தொழிலுக்காக இத்தாலிக்கு அனுப்பிவைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை யாது,

(iv) இவர்களின் பெயர், முகவரி, கடவுச்சீட்டு இலக்கம், வெளிநாட்டுக்குச் சென்ற திகதி மற்றும் நேரம் வெவ்வேறாக யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) தெரிவு செய்யப்பட்ட, தகைமையுடைய, பயிற்சி பெற்றவர்களுக்குப் பதிலாக வேறு ஆட்கள் இவ்விதமாக இத்தாலிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்பதை அவர் அறிவாரா?

(இ) ஆமெனில், இது சம்பந்தமாக மேற்கொள்ளப்போகும் நடவடிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இத்தாலியில் தனியார் சுகாதாரச் சேவை தாதி உதவியாளர் பதவிக்காகத் தெரிவு செய்யப்பட்டவர்களின் தொழில்த்தரம் மற்றும் வருமான மட்டம் தொடர்பாக இத்தாலி அரசாங்கம் ஏற்கனவே விசாரித்துள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்கிறாரா?

(உ) இன்றேல், ஏன்?

0505 / '08

14.

கௌரவ (திருமதி) சுஜாதா அழககோன்,— நகர அபிவிருத்தி, புனிதப் பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நகர அபிவிருத்தி அதிகார சபையினால் முகாமை செய்வதற்குப் பொறுப் பேற்கப்பட்டுள்ள சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எத்தனை,

(ii) உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் சொந்தமாக இருந்து, பின்பு நகர அபிவிருத்தி அமைச்சின் முகாமைத்துவத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை யாது,

(iii) அவற்றின் பெயர்கள் மற்றும் இவ்வாறு முகாமைத்துவத்தைப் பொறுப்பேற்ற திகதி ஆகியவை யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உள்ளூராட்சி நிறுவனங்களின் உரிமைக்காக நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வாடகையாகப் பெறப்பட்ட தொகையில் எத்தனை வீதம் உரிய உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்றது,

(ii) உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் சொந்தமான சுற்றுலா விடுதிகளை பொறுப்பேற்ற திகதி தொடக்கம் 2007.12.31 ஆம் திகதி வரை இந்த சுற்றுலா விடுதிகளுக்காக உரிய வீதத்தொகை வழங்கப்பட்டுள்ளதா,

(iii) அவ்வாறின்றேல், இந்த வீதத்தொகை வழங்கப்படவுள்ள சுற்றுலா விடுதிகள் மற்றும் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை ஆகியவை வெவ்வேறாக யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

0506 / ' 08

15.

கௌரவ (திருமதி) சுஜாதா அழககோன்,— நகர அபிவிருத்தி, புனிதப் பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நகர அபிவிருத்தி அதிகார சபையினால் மாத்தளை மாநகர சபைக்குச் சொந்தமான சுற்றுலா விடுதிக்கென மாதாந்தம் வழங்கப்படும் தவணைத் தொகை எவ்வளவு,

(ii) இச்சுற்றுலா விடுதியில் பணிபுரியும் பணியாளர்கள் எத்தனைபேர்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மாத்தளை சுற்றுலா விடுதி 2007.09.05 ஆம் திகதி முத்திரையிடப்பட்டது என்பதையும்,

(ii) இச்சுற்றுலா விடுதி 2008 மாச்சு மாதம் வரை வாடகைக்குக் கொடுக்க முடியா திருந்தது என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) (i) குறிப்பிட்ட காலத்தில் தொழிலை இழந்தவர்கள் தொடர்பாக அவசியமான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா,

(ii) இக்காலத்தில் மாத்தளை மாநகரசபைக்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டியது நகர அபிவிருத்தி சபையாயின் இந் நட்டத்தை ஈடுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) மாத்தளை சுற்றுலா விடுதிக்கு கேள்விப்பத்திரம் கோரப்பட்டபொழுது கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை யாது,

(ii) இவ்விண்ணப்பதாரர்கள் மற்றும் அவர்களின் நிதி ஆற்றல்கள் வெவ்வேறாக யாவை,

(iii) தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரரின் நிதி ஆற்றல் மற்றும் தொழிற் றுறைத் தகைமை யாது

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## **பிரேரணை முன்னறிவித்தல்**

1.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 2 ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினின்றும் விலக்குப்பெறுமாக.

2.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2008.06.05 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 4.30 மணிவரையும் இருக்குமாக. பி.ப. 12.30 மணிக்கு 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் (5) ஆம் பந்தி தொழிற்படுமாக.

3.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— சிறப்புரிமை (இல.1),— ஜெனீவா நகரில் நடைபெற்ற அனைத்துப் பாராளுமன்ற ஒன்றியத்தின் பாராளுமன்ற உறுப்பினர் களுக்கான மனித உரிமைகள் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டது தெடர்பாக தனது நற்பெயருக்கு கலங்கம் ஏற்படும் வகையில் அரச ஊடகங்கள் உண்மையற்ற, அபாண்டமான குற்றச்சாட்டுக்களை பிரச்சாரம் செய்ததன் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (டாக்டர்) ஜயலத் ஜயவர்தன அவர்கள், 2007 ஒற்றோபர் மாதம் 24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், 127 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

4.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— சிறப்புரிமை (இல.2),— வெளியாட்கள் இருவர் அனுமதியின்றி பாராளுமன்ற நூலகத்தினுள் நுழைந்து தான் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரைகள் பலவற்றின் அறிக்கைகளை எடுத்துச் சென்றதன் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ தயாசிறி ஜயசேகரஅவர்கள், 2007 நவெம்பர் மாதம் 14 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், 127 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

5.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— சிறப்புரிமை (இல.3),— வரவு செலவுத் திட்ட விவாதம் நடைபெற்ற நாட்களில் ஐக்கிய தேசிய கட்சியின் அங்கத்துவர்கள் மூவர் குற்றப் புலணாய்வுப் பிரிவினரால் அடிப்படையின்றி விசாரிக்கப்பட்டதன் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் கௌரவ ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்ற உறுப்பினர், அவர்கள், 2007 நவெம்பர் மாதம் 16 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், 127 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

6.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— சிறப்புரிமை (இல.4),— தான் சனாதிபதியைச் சந்தித்து அரசுடன் இணைய இணக்கம் தெரிவித்ததாக “த ஐலண்ட்” பத்திரிகை 2007 நவெம்பர் மாதம் 16 ஆம் திகதி பொய்யான செய்தியொன்றினை வெளியிட்டதன் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எம்.மஹரூப் அவர்கள், 2007 நவெம்பர் மாதம் 16 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், 127 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப் படுமாக.

7.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— சிறப்புரிமை (இல.5),— 2007 நவெம்பர் மாதம் 15 ஆம் திகதி “சுயாதீன” தொலைக்காட்சி செய்தியில் அன்றைய தினம் வரவு செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு தான் ஆற்றிய உரை பாரதூரமக திரிவுபடுத்தப்பட்டதன் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எஸ்.கே. சுபசிங்க அவர்கள், 2007 நவெம்பர் மாதம் 16 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், 127 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

8.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— சிறப்புரிமை (இல.6),— கௌரவ ரீ. கனகசபையின் மருமகன் சில ஆயுததாரிகளால் கடத்திச் செல்லப்பட்டமை மற்றும் கௌரவ (செல்வி) கே. தங்கேஸ்வரி, கௌரவ பா. அரியநேத்திரன் ஆகியோரின் பாதுகாப்பு நீக்கப்பட்டமை என்பவற்றின் மூலம் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற வகையில் அவர்களது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ இராஜவரோதயம் சம்பந்தன் அவர்கள், 2007 நவெம்பர் மாதம் 19 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், 127 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

9.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— சிறப்புரிமை (இல.7),— பாராளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் காராணமாக அவர்களது மக்கள் பிரதிநிதிகள் என்ற நற்பெயருக்கு கலங்கம் ஏற்பட்டதன் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் தங்களது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ விமல் வீரசங்ச அவர்கள், 2007 நவெம்பர் மாதம் 19 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், 127 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

10.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— சிறப்புரிமை (இல.8),— "தேசிய தொலைக்காட்சி" மற்றும் "சுயாதீன தொலைக்காட்சி" என்பன தனது சகோதரர் முன்னால் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ காமினி அத்துகோரல அவர்களின் மரணம் தொடர்பாக, தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான அமைச்சர் கௌரவ ஏ.பி. ஜகத் புஷ்பகுமார அவர்கள் பாராளுமன்றத்தில் வெளியிட்ட கூற்றின் உண்மை நிலவரத்தை மறைத்து ஒளிபரப்பியதன் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (திருமதி) தலதா அத்துக்கோரல அவர்கள், 2007 நவெம்பர் மாதம் 19 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், 127 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

11.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— சிறப்புரிமை (இல.9),— தான் சனாதிபதியைச் சந்தித்து அரசுடன் இணைய இணக்கம் தெரிவித்ததாக "த ஐலண்ட்" பத்திரிகை 2007 நவெம்பர் மாதம் 16 ஆம் திகதி பொய்யான செய்தியொன்றை வெளியிட்டதன் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா அவர்கள், 2007 நவெம்பர் மாதம் 20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், 127 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

12.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— சிறப்புரிமை (இல.10),— தான் பாராளுமன்றத்திற்கு சமுகமளிப்பதைத் தடுக்கும் நோக்குடன் இராணுவ வீரர்கள் சிலர் தனது வீட்டில் நுழைந்து தன்னைப்பற்றி விசாரித்ததன் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சாகல ரத்நாயக்க அவர்கள், 2007 நவெம்பர் மாதம் 19 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், 127 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

தாவர, விலங்கினப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு .

*2.

பாராளுமன்ற சபை முதல்வர்,— 2009 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அமைச்சுக்களின் செலவுத் தலைப்புக்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்கான தெரிகுழு,—

2009 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் தொடர்பான குழுநிலை நிகழ்ச்சி நிரலுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நேரம் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவின் தீர்மானத்திற்கிணங்க 16 தினங்களாக மாத்திரமே அமைவதாலும்,

வரவு செலவுத் திட்ட குழுநிலை நிகழ்ச்சி நிரலுக்காக நாளொன்றுக்கு சுமார் 07 மணித்தியாலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதோடு, ஒரே தினத்தில் பல்வேறு அமைச்சுக்களின் செலவுத் தலைப்புக்கள் பற்றிக் கலந்துரையாட நேர்ந்துள்ளதால் அதற்கிணங்கள் ஒரு செலவுத் திலைப்பிற்காக அண்ணளவாக சுமார் 02 மணித்தியாலங்களே ஒதுக்கப்பட்டுள்ள மையாலும்,

பாராளுமன்றத்தின் அரசாங்க கட்சியின் முதற்கோலாசான் மற்றும் எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் ஆகியோரின் இணக்கத்தின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட அமைச்சுக்களின் செலவுத் தலைப்புக்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்காக வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் தொடர்பான இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம் தொடங்கிய தினத்தில் இருந்து இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தின் வாக்கெடுப்பு நடைபெறுகின்ற தினம் வரையிலான காலப்பகுதிக்குள்ளே கூடிக் கலந்துரையாடத்தக்க வகையில் தெரிகுழுவானது தாபிக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

2. (அ) அக்குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரினால் நியமிக்கப்படல் வேண்டும்.

   (ஆ) 95 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், அக்குழுவானது ஆளுங்கட்சியிலிருந்தும் எதிர்கட்சியிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட முப்பத்தொன்றுக்கு (31) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

3. அக்குழுவானது

   (அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்,

   (ஆ) ஆட்கள், பத்திரங்கள் மற்றும் பதிவேடுகளை வரவழைப்பதற்கும் யாரேனும் நபரைப் பாராளுமன்றத்திற்கு அல்லது அக்குழுவின் முன் சமுகமளிக்குமாறு உத்தரவிடுவதற்கும்

   அதிகாரம் உடையதாய் இருத்தல் வேண்டும்.

4. மேற்படி தெரிவு செய்யப்பட்ட அமைச்சுக்களின் செலவுத் தலைப்புக்களின் குழுநிலை ஆய்வு ஆரம்பிக்கும் திகதியில் அல்லது அதற்கு முன்னர் அக்குழு அதன் அறிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தில் வேண்டும்.

*3.

பிரதேசிய சங்வர்த்தனை வங்கிச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*4.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*5.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*6.

மோட்டார் வாகன (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*7.

இலங்கை கடன் தகவல் பணியக (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*8.

தேசிய புடைவை மற்றும் உடுதுணி நிறுவகச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*9.

குடியியல் வான்செலவு சட்டமூலம். — இரண்டாம் மதிப்பீடு.

*10.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*11.

இலங்கை மின்சாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*12.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*13.

இந்திய வம்சாவழியினரான ஆட்களுக்கு பிரசாவுரிமை வழங்கல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*14.

நாடற்ற ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்கல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*15.

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*16.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2009) — இரண்டாம் மதிப்பீடு.

*17.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*18.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*19.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*20.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*21.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*22.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்

துடன் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 37 ஆம் இலக்க கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம்

### 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 37

2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் 30602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "இலங்கைப் புகையிரதத் திணைக்கள பண்டகசாலை முற்பணக் கணக்கு" — இலங்கை புகையிரதத் திணைக்களம் என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன் :-

(i) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் **II** இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் **III** இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை ரூபா 1,000,000,000 இலிருந்து ரூபா 680,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் **IV** இல் குறித்துரைக்கப்பட்ட பற்றுமீதியின் உச்ச எல்லை ரூபா 3,800,000,000 இலிருந்து ரூபா 3,900,000,000 வரை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை ரூபா 400,000,000 இலிருந்து ரூபா 550,000,000 வரை.

(இக்கட்டளை 2007.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் :* மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2008.08.28.பெறப்

(அமைச்சரவையின் அங்கீகாரம் பட்டுள்ளது.)

*23.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2008 ஏப்பிறல் 30 ஆந் திகதிய 1547/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.10.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*24.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2008 ஓகத்து 26 ஆந் திகதிய 1564/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.10.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*25.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவர்,— நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் 29 ஆம் பிரிவுடனும் அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் வாடிக்கையாளர் ஒருவரின் வேண்டுகோள்களின்பேரில் இலத்திரனியல் நிதிக் கைமாற்றுதல் ஒவ்வொன்றையும் நிதிசார் உளவறிதற் கூறுக்கு அறிக்கையிடப்பட வேண்டிய நிதித் தொகையின் குறைந்த எல்லை விதிக்கப்பட்டு சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2008 ஜூன் 25 ஆந் திகதிய 1555/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.10.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*26.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (எ) ஆம் பந்தியின் கீழ் தேயிலைச் சபையால் ஆக்கப்பட்டு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு 2008, சனவரி மாதம் 10 ஆம் திகதிய 1531/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான "2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபை(தேயிலைத் தொழிற்சாலைகளின் நிர்மாணமும் தொழிற்பாடும்) குறைந்தபட்ச நியமங்கள் ஒழுங்குவிதிகள்" அங்கீகரிக்கப்படுமாக.

*27.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008 ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*28.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப் பட்ட விடயம் (ஒற்றோபர் 03, 2006),— "(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் இலங்கை மருத்துவப் பேரவையுடன் கலந்தாலோசனை செய்து ஆக்கப்பட்டு 2006, ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய 1458/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2006.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டு வரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*29.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007 ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*30.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல. 1),— 2002.01.28 ஆம் திகதி அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள், அரசியலமைப்பின் பதினேழாவது சீர்திருத்தத்தின் 27 (2) ஆம் பிரிவின் கீழ் 2002.01.29 ஆந் திகதியிலிருந்து குறித்த பதவிக்கு மீள நியமிக்கப்பட்டார். அதனையடுத்து, அரசாங்க சேவையில் மேற்கொள்ளப்பட்ட சம்பளத் திருத்தங்களின் வண்ணம், தேர்தல் ஆணையாளரின் சம்பளம் 2006.11.23 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டது, எனினும், செயலாளர் பிரமாணக் குறிப்பின் கீழ் இந்தப் பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்வது தொடர்பாக குறித்த சந்தர்ப்பத்தில் தீர்மானிக்கப் படவில்லை யாதலால், தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள் மீள சேவைக்கு அமர்த்தப்பட்ட 2002.01.29 ஆம் திகதியிலிருந்து பதவி வகிக்கும் வரையான காலத்திற்குரிய சம்பள ஏற்ற பெறுமானங்களையும் சம்பளத்துடன் சேர்த்து வழங்க வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*31.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,- அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 153(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் திரு. எஸ். சுவர்ணஜோதி அவர்கள் 2008.01.04 ஆம் திகதியிலிருந்து கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்கு நியமிக்கப்பட்டதையடுத்து, கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்குரிய எஸ். எல். 4 ரூபா 47,515-12x1,425 — 64,615 சம்பள அளவுத்திட்டத்தின் ரூ. 58,915 சம்பளத்திட்டத்தில் நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. திரு. சுவர்ணஜோதி அவர்கள் பதவி வகிக்கும் காலம் வருடாந்த ஏற்றத்தை வழங்குவதற்கும் 2008.08.06 ஆம் திகதி அமைச்சரவையினால் தீர்மானிக்கப் பட்டது. ஆகையால், கணக்காய்வாளர் தலைமை அதிபதி திரு. எஸ். சுவர்ணஜோதி அவர்களுக்கு 2008.01.04 ஆந் திகதியிலிருந்து ரூ. 58,915 மாதாந்த சம்பளத்தை வழங்கவும், பதவிவகிக்கும் காலம் வரை பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றத்தை வழங்கவும் வேண்டுமென இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*32.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— நீதிச்சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்க ளுக்கும் செலுத்தப்படும் மாதாந்தப் படி, அவர்களின் மாதாந்த சம்பளத்தின் 1/3 க்குச் சமமான ஒரு படியாக இருக்க வேண்டுமெனவும், அது 2007 சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து செலுத்தப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது. நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் படிகள் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளு மன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளினால் தீர்மானிக்கப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் படியானது பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*33.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— *அரசியலமைப்பின் கீழான தீர்மானம்* (இல.1),— அரசியலமைப்பின் 54(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் ஊதியமும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்த ஊதியம் 2007.01.01 ஆம் திகதியி லிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாள ருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய ஊதியமும், படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக் கப்பட்ட ஊதியமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஊதியமும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*34.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— *அரசியலமைப்பின் கீழான தீர்மானம்* (இல.2),— அரசியலமைப்பின் 155அ(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் கொடுப்பனவுகளும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவில் (எரிபொருள் படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தக் கொடுப்பனவு 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிளாசருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத் தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் கொடுப்பனவுகளும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக் கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*35.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1994 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 2(7) ஆம் பந்தியின் பிரகாரம் அக் குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 66,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 80,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 12,000.00 மாதாந்தம் |
| மொத்தம் | | ரூ. 77,000.00 |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளமும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*36.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் பிரகாரம் தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும் படிகளும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

37.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.